வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**IP.No. 64/2022**

வழக்கு சாட்சி **PW 1**

1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திருகே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அம்சவள்ளி | தொழில் | : இல்லத்தரசி |
| தந்தை பெயர் | : பழனிச்சாமி | கணவர் பெயர் | : ராமசாமி |
| கிராமம் | : ஒட்டன்சத்திரம் | வயது | : சுமார் 62 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 10.07.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

2-வது எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:

நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? நான் தொகை ரூ.2,00,000 சகாயம் என்பவருக்கு கொடுத்திருந்தேன். சகாயம் என்பவர் இடத்தினை விற்பனை செய்துவிட்டார். அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தையல் தொழில் வீட்டிலேயே வைத்து நடத்தி வருகிறேனா என்றால் ? ஆமாம். எனது கணவர் எப்போது இறந்தார் என்றால் ? கடந்த 2003ம் ஆண்டு இறந்துவிட்டார். எனக்கு நான் வீட்டில் வைத்து தையல் தொழில் செய்து வருவதில் வரக்கூடிய வருமானம் தவிர வேறு வருமானம் எனக்கு எதுவும் இல்லை என்றால் ? ஆமாம். நான் எத்தனை ஆண்டுகாலமாக தையல் தொழில் செய்து வருகிறேன் என்றால் ? 10 வருட காலமாக தையல் தொழில் செய்து வருகிறேன். தையல் தொழிலில் இருந்து மாதம் எனக்கு சுமாராக எவ்வளவு வருமானம் வரும் என்றால் ? மாதம் ரூ.4,000 கிடைக்கும்.

சகாயம் என்பவருக்கு எப்போது நான் பணம் கொடுத்தேன் என்றால் ? 19.01.2020ம் தேதி கொடுத்தேன். சகாயம் என்பவருக்கு நான் 19.01.2020ம் தேதி தொகை ரூ.2,00,000 கொடுத்த பிறகு நாளது தேதி வரை சகாயம் என்பவர் அசல், வட்டி தொகை எதுவும் எனக்கு கொடுக்கவில்லை என்றால் ? ஆமாம். கொடுக்கவில்லை. சகாயம் என்பவரிடமிருந்து தொகையினை வசூல் செய்ய கடனுறுதிசீட்டின் பேரில் நாளது வரை எந்த வழக்கும் தொகை வசூல் செய்ய வேண்டி தாக்கல் செய்யவில்லை என்றால் ? வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நானும் சகாயம் என்பவரும் ஒன்றாக சேர்ந்து கொண்டு 2-வது எதிர்மனுதாரரை அலைக்கழிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இம்மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்றால் ? இல்லை. உண்மையிலேயே தொகை ரூ.2,00,000 தொகையினை நான் தையல் தொழில் வழியாக சம்பாதித்து 1-வது எதிர்மனுதாரருக்கு கொடுத்திருக்கும் பட்சத்தில், அந்த தொகையை வசூல் செய்ய கடனுறுதிசீட்டை வைத்து தனியாக வழக்கு

தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு தாக்கல் செய்யாத காரணத்தினால் நான் தொகை ரூ.2,00,000 சகாயம் என்பவருக்கு கொடுக்கவில்லை என்றால் ? சரியல்ல.

1-வது எதிர்மனுதாரர் 2-வது எதிர்மனுதாரருக்கு எப்போது சொத்தினை கிரையம் செய்து கொடுத்தார் என்றால் ? 10.01.2022-ம் ஆண்டு சொத்தினை விற்பனை செய்தார். மனுச்சொத்தானது சகாயம் என்பவருக்கு மட்டும் பாத்தியம் ஏற்படாமல் அவரது மனைவிக்கு பாத்தியம் ஏற்பட்டுள்ள நிலையில் சகாயம் என்பவரும், அவரது மனைவியும் சேர்ந்து சொத்துக்களை 2-வது எதிர்மனுதாரருக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால் ? சகாயம் என்பவர் பெயரில் மட்டுமே நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிருபண பிரமாணபத்திரிக்கையில் மனுச் சொத்துக்கள் ஒருபோதும் 2-வது எதிர்மனுதாரரின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் இல்லை என்றால் ? மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு 2-வது எதிர்மனுதாரர் பெயரில் ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1-வது எதிர்மனுதாரரால் சொத்தின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் இருந்து வருகிறார். மனுச் சொத்தினை எந்த தேதியில் நான் சென்று பார்த்த போது சகாயம் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்றால் ? 21.05.2022ம் ஆண்டு ஆகும்.

மனுச் சொத்திற்கான வீட்டு வரி, குடிநீர் வரி, மின்கட்டணம் செலுத்தியது ஆகியவைகள் 2-வது எதிர்மனுதாரர் பெயரில் உள்ளது என்றால் ? சரியல்ல. நான் சென்று பார்த்த போது 1-வது எதிர்மனுதாரர் பெயரில் தான் இருந்தது. நான் மனுவிற்காக தவறாக சொல்கிறேன் என்றாலும் அனைத்து வரிவகையறாக்களும் 2-வது எதிர்மனுதாரர் பெயருக்கு பெயர் மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்றால் ? சரியல்ல. கடந்த 01.01.2009 முதல் 03.01.2022ம் தேதி வரை மனுச் சொத்திற்கு வில்லங்கம் போட்டு பார்த்து எந்தவித வில்லங்கமும் சொத்தில் இல்லாத நிலையில் 2-வது எதிர்மனுதாரர் சொத்தினை கிரையம் பெற்றுள்ளார் என்றால் ? சரியல்ல. கடனுறுதிசீட்டு எழுதிக் கொடுத்து கடன் வாங்கிய விபரம் 2-வது எதிர்மனுதாரருக்கு தெரியாது. 2-வது எதிர்மனுதாரர் சொத்தினை நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்ற நபர் என்பதாலும், உரிய நேரத்தில் 2-வது எதிர்மனுதாரருக்கு நான் அறிவிப்பு அனுப்பாததால் இம்மனுவானது 2-வது எதிர்மனுதாரரை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனு காலவரையறைச் சட்டத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.07.10 17:31:53 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்